பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 07 2024 **SUNDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள் - வாசிப்பவர் - முஹமது

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா நாடுகளில் மூன்று நாள் அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். .

2. அன்னையின் பெயரில் ஒரு மரம் நட வேண்டும் என்ற இயக்கத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இந்தூரில் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. பாக்கெட்டுகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் உறைகள் மீது ஊட்டச்சத்து குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்ற திட்டத்திற்கு மத்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

4. அஸ்ஸாமில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 58-ஆக அதிகரித்துள்ளது.

5. கிராண்ட் மேட்ரிக்ஸ் மல்யுத்த போட்டியின் மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Vinesh Bhogat** தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா நாடுகளில் மூன்று நாள் அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக நாளை மாஸ்கோ புறப்பட்டுச் செல்லும் அவர், அங்கு நடைபெறும் இந்தியா – ரஷ்யா இடையேயான வருடாந்திர மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் இருநாடுகளுக்கும் இடையேயான பன்முகத்தன்மை கொண்ட உறவுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச மற்றும் மண்டல விவரகாரங்கள் குறித்து பரஸ்பரம் இருநாட்டு தலைவர்களும் தங்களது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவுள்ளனர்.

தமது ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர், வரும் செவ்வாய்க்கிழமை ஆஸ்திரியா புறப்பட்டுச் செல்கிறார்.

கடந்த 41 ஆண்டுகளில் ஆஸ்திரியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்ளும் முதல் பிரதமர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

அன்னையின் பெயரில் ஒரு மரம் நட வேண்டும் என்ற இயக்கத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இந்தூரில் இன்று தொடங்கி வைக்கிறார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் 5 கோடியே 50 லட்சம் மரங்களை நடுவது என்ற இலக்குடன் இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

இன்று முதல் வரும் 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த இயக்கத்தின் மூலம் 51 லட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

வாகனங்களின் விற்பனையை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், வரும் ஆண்டுகளில் வாகனங்களின் விற்பனை 50 லட்சம் கோடி ரூபாய் அளவை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பாரம்பரிய விவசாய முறையிலிருந்து, எரிசக்தி வழங்குபவர்களாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வகையில் பலனளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாற்று எரிபொருளாக எத்தனால் பயன்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், எதிர்காலத்தில் ஹைட்ரஜன் முக்கிய எரிபொருளாக உருவெடுக்கும் என்று அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியாவின் இலக்குகளை எட்டுவதற்கு இத்தகைய முயற்சிகள் உதவிடும் என்று திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>><<<<<

பாக்கெட்டுகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் உறைகள் மீது ஊட்டச்சத்து குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்ற திட்டத்திற்கு மத்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலை ஆணைய தலைவர் திரு. அபூர்வ சந்திரா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, சர்க்கரை, உப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட கொழுப்பு உள்ளிட்ட விவரங்கள் பாக்கெட்டுகள் மீது பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட வேண்டும் என்று சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்து தொடர்பான விவரங்களை நுகர்வோர் அறிந்து கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உணவுகளை அவர்கள் தேர்ந்தெடுக்க உதவிடும் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டதிருத்தம் குறித்து மக்களின் ஆலோசனைகளை பெறும் வகையில், அதன் வரைவு அறிக்கை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களிடையே நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில், குழு ஒன்றை அமைக்க இரு மாநில அரசுகளும் முடிவு செய்துள்ளன.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய தெலங்கானா துணை முதலமைச்சர் திரு. **Mallu Bhatti Vikramarka,** ஆந்திராவிலிருந்து தெலங்கானா தனி மாநிலமாக பிரிக்கப்பட்ட போது உருவான அனைத்து பிரச்சினைகள் குறித்து ஆலோசித்து தீர்வு காண முடிவு செய்யப்பட்டதாக கூறினார்.

இந்த உயர்மட்டக் குழுவில் இரு மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச்செயலாளர்கள் மற்றும் மூன்று உயரதிகாரிகள் இடம்பெறுவார்கள் என அவர் தெரிவித்தார்.

ஆந்திர மாநில மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் 9 மற்றும் 10-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதில் தீர்வு ஏற்படாவிட்டால், இந்த பிரச்சினை அமைச்சர்கள் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் என்று திரு. **Mallu Bhatti Vikramarka** தெரிவித்தார்.

**>>>>><<<<<**

ஒடிசா மாநிலத்தில் உள்ள உலகப் புகழ் பெற்ற பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள ரத யாத்திரையில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

நான்கு நாள் பயணமாக ஒடிசா சென்றுள்ள அவர், புவனேஷ்வரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க உதயகிரி மற்றும் கந்தகிரி குகைகளுக்குச் சென்று பார்வையிடுகிறார்.

பின்னர் **Utkal** பல்கலைக்கழக மாணவர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

**Haridamada** கிராமத்தில் உள்ள பிரம்மகுமாரிகள் அமைப்பின் வழிபாட்டு மையத்தையும் அவர் திறந்து வைக்கிறார்.

நாளை மறுநாள், புவனேஷ்வரில் உள்ள தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 13வது பட்டமளிப்பு விழாவில் திரு. திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

**>>>>><<<<<**

அஸ்ஸாமில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 58-ஆக அதிகரித்துள்ளது

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 6 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்த வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாகவும், இதன் காரணமாக 24 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

107 வருவாய் வட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 500-க்கு மேற்பட்ட கிராமங்கள் மற்றும் 68 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலான விளைநிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 மணிநேரத்தில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 208 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பிரம்மபுத்ரா, பராக் நதிகளில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டி ஓடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கனமழை – வெள்ளம் காரணமாக, 176 சாலைகள் மற்றும் இரண்டு பாலங்கள் உட்பட உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் அம்மாநில அரசு 293 நிவாரண முகாம்களையும், 294 உணவுப் பொருள் விநியோக மையங்களையும் மாநில அரசு அமைத்துள்ளது.

இதனிடையே, அம்மாநிலத்தில் கன முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மத்திய அரசின் திட்டங்கள் பயனாளிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதற்கான இயக்கம், நித்தி ஆயோக் சார்பில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, மூன்று மாதங்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - முருகேசன் 40 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

கிராண்ட் மேட்ரிக்ஸ் மல்யுத்த போட்டியில் இந்தியாவின் **Vinesh Bhogat** தங்கப்பதக்கம் வென்றார்.

ஸ்பெயினில் நேற்று நடைபெற்ற மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதனையடுத்து, பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கான 20 நாள் பயிற்சியில் அவர் பங்கேற்கிறார்.

**>>>>><<<<<**

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையிலான 15 பேர் கொண்ட இந்திய அணியில் ஸ்மிருதி மந்தனா, ஷஃபாலி வர்மா, **Deepti Sharma, Richa Ghose, Uma Chetry** உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

எட்டு அணிகள் பங்கேற்கும் இப்போட்டி வரும் 19ஆம் தேதி தொடங்கி, 28ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

தரம்சாலாவில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

21ஆம் தேதி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியையும், 23ஆம் தேதி நேபாள அணியையும் இந்தியா எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் தென்னாப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹராராவில் நடைபெறவுள்ள இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் மணி 4.30-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஜிம்பாப்வே 13 ரன் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது.

>>>>><<<<<

கனடா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பிரியன்ஷு ரஜாவத் தோல்வியடைந்தார்.

>>>>>END<<<<<